ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
මානව ශාස්ත්‍ර හා සමාජ විද්‍යා පීඨය
නීති අධ්‍යයන දෙපාර්තමේන්තුව
නීතිවේදී උපාධි පාඨමාලාව - VI වන මට්ටම
අවසාන පරීක්ෂණය - 2016/2017
දීලික්ත නීතිය – LWU4326/LLU6814
කාලය - පැය තුනයි (03)

දිනය : 2018 ජූලි මස 23 වේලාව: ප.ව. 01.30 සිට ප.ව. 04.30 දක්වා

අපැහැදිලි අත්අකුරු සඳහා ලකුණු අඩු කෙරේ.

අනවසර ලියකියවිලි සහ ජංගම දුරකථන හෝ වෙනත් ඉලෙක්ට්‍රොනික උපකරණ කිසිවක් විභාග ශාලාව තුළ දී ඔබ ළඟ තබා ගැනීම විභාග වරදකි.

I කොටසින් පළමු ප්‍රශ්නයට (01) සහ II කොටසින් ප්‍රශ්න තුනකට (03) පිළිතුරු සපයන්න.

## I කොටස - අනිවාර්ය ප්‍රශ්නය (ලකුණු 40)

1. පොල්වත්ත මහා විද්‍යාලයෙන් 100 ක පමණ ළමුන් පිරිසක් කෞතුකාගාරය නැරඹීම සඳහා විනෝද චාරිකාවක රැගෙන යන ලදී. ළමුන් සියලු දෙනාම අවුරුදු 10 - 11 අතර වයසේ පසුවූවන්ය. අවුරුදු 12 ට අඩු ළමුන්ට කෞතුකාගාරය නොමිලයේ නැරඹීමට අවසර දී තිබූ බැවින් ඔවුන් ටිකට්පත් මිලදී ගත්තේ නැත. කෙසේ වුවත්, ළමුන් භාරව සිටි ගුරුවරු ටිකට්පත් මිලදී ගත්හ. නැරඹීම අතරතුර දී ඇතැම් ළමෝ උඩුමහලේ කාමරයකට යාමට තිබූ දැවමය පියගැටපෙළ දිගේ ඉහළටත් පහළටත් දිවීමට පටන් ගත්හ. පියගැටපෙළ පාමුල දැන්වීම් පුවරුවක සඳහන් වූයේ "ඇතුළු වීම කෞතුකාගාර කාර්යය මණ්ඩලයට පමණයි" යනුවෙනි. ළමුන්ව පාලනය කර ගන්නා ලෙස කෞතුකාගාර කාර්යය මණ්ඩලය ගුරුවරුන්ගෙන් ඉල්ලා සිටි නමුත් ගුරුවරු එසේ කිරීමට අපොහොසත් වූහ. ඇතැම් ළමුන් ප්‍රදර්ශන භාණ්ඩ ගබඩා කර තිබූ කාමරයට දිවගොස් අවුරුදු 200 කට වඩා පැරණි මිල කළ නොහැකි මැණික් එබ්බවූ පෙට්ටියක් කඩා දමා පිළිසකර කළ නොහැකි අයුරින් හානි කරන ලදී. පෙට්ටිය අයත් වූයේ සරත්ට වන අතර ඔහු එය කෞතුකාගාරයේ ප්‍රදර්ශනාගාරය කිරීමට තාවකාලිකව ලබා දී තිබුණි.

හදිසියේම පියගැටපෙළ කඩා වැටුණි. ළමෝ කිහිප දෙනෙකු බරපතල ලෙස තුවාල ලත්හ. ඉන් අනතුරුව ඇති වූ ව්‍යාකූල තත්ත්වයේ ප්‍රතිඵලයක් ලෙස කෞතුකාගාරයේ ප්‍රදර්ශන භාණ්ඩ

කිහිපයක් සොරාගෙන තිබුණේ සමහර විට, අනෙක් නරඹන්නන් විසින් හෝ සේවකයන් විසින් විය හැක.

කෞතුකාගාරය විසින් මසකට පමණ පෙර මෙන්ඩිස්ව කුලියට ගෙන තිබුණේ පියගැටපෙළ පිළිසකර කිරීමට වුවත් පසුව දැන ගැනීමට ලැබුණේ, පිළිසකර කිරීම සඳහා මෙන්ඩිස් විසින් ප්‍රමිතියෙන් අඩු දැව යොදා ගැනීමෙන් එලෙස පියගැටපෙළ කඩා වැටුණු බවයි.

ගුරුවරුන්ගෙන් අයෙකු වූ පද්මා මෙම හදිසි අනතුර දැකීමෙන් ස්නායු කම්පන තත්ත්වයට පත් වූවාය. දිගටම පැවති මානසික අවපීඩන තත්ත්වය හේතුකොටගෙන ඇයට පාසලේ රැකියාව අතහැර යාමට සිදු විය.

තුවාල ලත් ළමුන්, පද්මා, සරත් සහ කෞතුකාගාර කළමනාකාරීත්වයට, හානි සඳහා වන්දි ලබා ගැනීම පිණිස නඩු පැවරිය හැකිද යන්න සාකච්ඡා කරන්න.

ඔබ විසින්,

1) මෙම සෑම පැමිණිලිකරුවෙකුට ම නඩු පැවරිය හැක්කේ කාට විරුද්ධව ද යන්න සහ

2) කුමන පදනම මත ද යන්න සාකච්ඡා කළ යුතුයි.

**II කොටස - මෙම කොටසින් ප්‍රශ්න තුනකට (03) පිළිතුරු සපයන්න.**

**(සෑම ප්‍රශ්නයකට ම ලකුණු 20 බැගින් හිමි වේ.)**

2. "ප්‍රතිපුරුෂ වගකීම පාදක වූ ප්‍රතිපත්තිමය අරමුණු වන්නේ, එය අපක්ෂපාතී, සාධාරණ සහ යුක්ති සහගත වන තාක් තෝරතමය වරද සඳහා වගකීම, වින්දිතයාට වන්දි ගෙවීමේ ක්‍රමයක් සහිතව විත්තිකරු විසින් ඉසිලිය යුතු වන බවයි."

   [*The Catholic Child Welfare Society and others (Appellants) v. Various Claimants (FC) and The Institute of the Brothers of the Christian Schools and others (Respondents)* [2012] UKSC 56]

   ප්‍රතිපුරුෂ වගකීම පිළිබඳ වත්මන් නීති තත්ත්වය, අපක්ෂපාතී, සාධාරණ සහ යුක්ති සහගත ද යන්න සම්බන්ධයෙන් ඔබේ අදහස් දක්වමින් ඉහත ප්‍රකාශය සාකච්ඡා කරන්න. ඔබේ පිළිතුර තහවුරු කිරීමට නඩුතීන්දු උපුටා දැක්විය යුතුයි.

3. (අ) රමේෂ් හා චම්පිකා ප්‍රථම වරට සාදයක දී මුණගැසුණි. සාදයෙන් පසුව රමේෂ් චම්පිකාව නිවසට ඇරලවීමට ඉදිරිපත් විය. සාදය අතරතුරදී මිතුරෙකු චම්පිකාට පවසා තිබුණේ රමේෂ්ගේ අනතුරුදායක රිය පැදවීම හේතුවෙන් වරක් ඔහුගේ බලපත්‍රය අවලංගු කර තිබූ බවයි. ඔහු රිය පැදවීමට හැකි තත්ත්වයේ සිටින්නේ ද යන්න චම්පිකා රමේෂ්ගෙන් විමසුවා ය. රමේෂ් පිළිතුරු දුන්නේ "ඔව් මම මුළු රැයටම පානය කළේ එකම බියර් වීදුරුවක්

පමණයි" යනුවෙනි. නිවසට ඇරලවීම පිණිස රමේෂ් කළ ඇරයුම චම්පිකා පිළිගත්තාය. පැයට 100 km ක වේගයෙන් ධාවනය කරමින් සිටි රමේෂ්ගේ රථය ලිස්සා ගොස් විදුලි පහන් කණුවක හැපුණි. චම්පිකා බරපතල ලෙස තුවාල ලැබුවාය. පොලිසිය සොයා ගත්තේ රමේෂ් රිය පැදවීමේ දී නෛතික සීමාව ඉක්මවා මත්පැන් පානය කර තිබූ බවයි.

චම්පිකා රමේෂ්ට විරුද්ධව නඩු පැවරීමට අදහස් කරයි.

ඇයට උපදෙස් දෙන්න.

(ආ) සීමා සහිත ඇඩ්වෙන්චර්ස් සමාගම විසින් සංවිධානය කළ තරුණ ශූරයින්ගේ තරගාවලියට රොහාන් සහ මොහාන් සහභාගි වේ. තරගයට සහභාගි වන්නන් කණ්ඩායම් වශයෙන් වෙන් වී, කඳු නැගීම, රැහැන් භාවිතයෙන් කඳු හරහා යාම සහ රැහැන් භාවිතා කරමින් ගංගා තරණය කිරීම යනාදී වූ ක්‍රියාකාරකම්වල නිරත වීමට අවශ්‍ය වේ. සීමා සහිත ඇඩ්වෙන්චර්ස් සමාගම අවශ්‍ය සියලුම ආම්පන්න සපයන අතර තරගකරුවන්ට ඔවුන්ගේම ආම්පන්න භාවිතා කිරීම තහනම්ය. සියලුම තරගකරුවන් තරගය පවත්නා කාලය තුළ ඇති විය හැකි ඕනෑම හානියක් සම්බන්ධව සීමා සහිත ඇඩ්වෙන්චර්ස් සමාගම වගකීමෙන් නිදහස් කිරීමට එකඟත්වය දක්වන පෝරමයක් අත්සන් කළ යුතු විය. සෑම තරගකරුවෙකුම සීමා සහිත ඇඩ්වෙන්චර්ස් සමාගම මගින් සේවයේ යෙදවූ කණ්ඩායම් නායකයෙකු සමග එක්ව කටයුතු කරන ලදී.

අධික බෑවුම් සහිත ප්‍රපාතයක් නගින අතරතුර භාවිතා කිරීම පිණිස රොහාන් ට රැහැන් පටක් සපයා දී තිබුණි. එය කැඩී ගොස් ඇද වැටීමෙන් ඔහුට තුවාල සිදු විය.

කැලයක් හරහා ගමන් කරන අතරතුර දී මොහාන්ගේ කණ්ඩායමේ නායකයා, උපදෙස් තුළ අන්තර්ගත නොවූ කෙටි මාර්ගයක් භාවිතා කළ හැකි බවට යෝජනා කළ නමුත් එය වඩාත් අනතුරු සහිත මාර්ගයක් විය. ඔහු පැවසුවේ ඔවුන්ගේ කණ්ඩායමට ජයග්‍රහණය කිරීමට වඩාත් හොඳ අවස්ථාවක් ඇති බවයි. මොහාන් ඇතුළු කණ්ඩායමේ සියලුම සාමාජිකයින් ඊට එකඟ වූ නමුත් එම මාර්ගයේ මඳක් දුර යනවිට පටු මාර්ගයකින් ලිස්සා පහළ තිබූ ගල් මතට ඇද වැටීමෙන් මොහාන් තුවාල ලැබීය.

රොහාන් සහ මොහාන් සීමා සහිත ඇඩ්වෙන්චර්ස් සමාගමට විරුද්ධව නඩු පවරා ඇත. සීමා සහිත ඇඩ්වෙන්චර්ස් සමාගමට ගෙන ආ හැකි විත්තිවාචකයන් පිළිබඳව උපදෙස් දෙන්න.

4. කුමාරි, ABC බැංකුවේ ප්‍රධාන මූල්‍ය නිලධාරී තනතුරට අයදුම් කළාය. තනතුර සඳහා වූ දැන්වීමෙහි සඳහන් වූයේ තෝරා ගැනීමේ අවසන් ලේඛනය සැකසීමට පෙර බැංකුව සියලු අයදුම්කරුවන් පිළිබඳ ස්වාධීන තක්සේරුවක් කරනු ඇති බවයි. ABC බැංකුවේ මානව සම්පත් කළමනාකාරිණිය වූ මල්ලිකා, වසර 10 කට පෙර කුමාරිගේ කළමනාකරුව සිටි සිරිසේනට විද්‍යුත් තැපැල් පණිවිඩයක් යවමින්, ඇය පිළිබඳව තක්සේරුවක් ඔහුගෙන් ඉල්ලා සිටින ලදී. සිරිසේනගේ පිළිතුර වූයේ, "කුමාරි මා වෙනුවෙන් සේවය කරන කාලයේ දී නැති වූ ඇතැම් මුදල් සම්බන්ධයෙන් විමර්ශනයක් පැවැත්වීමට අපට සිදු වූ බව ඔබ දැන සිටිය යුතුයි කියා මා සිතනවා. එම කාරණය ඉතා රහස්‍ය වුවත් මා ඔබට පමණක් ඒ බව පවසනවා" යනුවෙනි. ඇත්ත වශයෙන්ම කුමාරි යම් වැරදි ක්‍රියාවලින් නිර්දෝෂී වී තිබුණා ද සිරිසේන එය සඳහන් කළේ නැත. මල්ලිකාගේ රාජකාරී විද්‍යුත් තැපැල් ගිණුමට ප්‍රවේශය තිබුණු ඇයගේ ලේකම්වරයා වූ පෙරෙයිරා, අත් වැරදීමකින් සිරිසේනගේ විද්‍යුත් තැපැල් පණිවිඩය මානව සම්පත් කළමනාකරණ දෙපාර්තමේන්තුවේ කාර්යය මණ්ඩලයට යවන ලදී. විසි වසරකට පෙර කුමාරි සමග විශ්වවිද්‍යාලයේ කණ්ඩායම් සගයෙකුව සිටි කාර්ය මණ්ඩල සාමාජිකයෙකු කාර්ය මණ්ඩලයේ සැමටම පිළිතුරු දැක්වූයේ, "මම පුදුම වුණේ නැහැ. අපේ අවසාන අවුරුද්දේ දී ඇය විභාග වංචා වරදට හසු වුණා" යනුවෙනි.

කුමාරිට රැකියාව නොලැබුණු අතර ඇය පිළිබඳව හුවමාරු වෙමින් තිබූ විද්‍යුත් තැපැල් පණිවිඩ පිළිබඳව ඇය විසින් දැන ගන්නා ලදී. කෙසේ වුවත්, ඇයට රැකියාව නොලැබීමට හේතු වූයේ ඇයට වඩා සුදුසුකම් ලත් වෙනත් අයදුම්කරුවෙකු සිටි බැවිනි. ඇය අපහාසය සඳහා නඩු පැවරීමට අපේක්ෂා කරයි. ඇයට උපදෙස් දෙන්න.

5. "පුද්ගලික කරදරය සහ Rylands v. Fletcher රීතිය අතර හරයාත්මක වෙනසක් නැත. මෙම එක් නඩුකරයක් වෙනුවට අනෙක් නඩුකරය ගෙන ඒමට හැකියාව පවතී."

ඔබ මෙම ප්‍රකාශය සමග එකඟ වන්නේ ද?
සාකච්ඡා කරන්න.

6. "Res Ipsa Loquitur මූලධර්මය නොසැලකිල්ල පිළිබඳ නීතියට අයත් නොවන අතර සාක්ෂි නීතියට අයත් වේ. මෙම තත්ත්වය අදාළ වන්නේ නොසැලකිල්ලේ අනුමිතිය සහිත අවස්ථාවන්ට වන අතර සාක්ෂි වැඩි බර මත ඔප්පු කිරීමේ භාරය විත්තිකරු වෙත විතැන් වන නිසා අධිකරණය මෙම මූලධර්මයේ අදාළත්වය සීමා කරනු ඇත."

අධිකරණය මෙම මූලධර්මය භාවිතයට අවසර දෙනු ලබන අවස්ථා විවරණය කරමින් මෙම ප්‍රකාශය සාකච්ඡා කරන්න.

***හිමිකම් ඇවිරිණි***

THE OPEN UNIVERSITY OF SRI LANKA

LL.B. DEREE PROGRAMME – LEVEL 6

FINAL EXAMINATION 2016/2017

**LAW OF DELICT – LWU4326/LLU6814**

DURATION – 3 HOURS

Date: 23rd July 2018 Time: 1.30 – 4.30 p.m.

| |
|---|
| Students will be penalised for illegible handwriting.<br><br>It is an examination offence to have unauthorized documents and mobile phones or any other electronic item with you in the examination hall. |

**Answer Question 1 from Part I and THREE questions from Part II**

**PART I – compulsory question (40 marks)**

1. About 100 children from Polwatte Maha Vidyalaya were taken on a school trip to the museum. The children were all 10 – 11 years old. Since children under 12 are permitted to visit the museum free of charge they did not buy tickets. However, the teachers in charge bought tickets. During the course of the visit some of the children started running up and down a wooden staircase that led to a room above. A sign at the bottom of the stairs read "Entry only for museum staff." The museum staff requested the teachers to control the children but the teachers were unable to do so. Some children ran into the room where some exhibits were stored and pulled down a priceless jewelled box, which was over two hundred years old, damaging it beyond repair. The box belonged to Sarath who had lent it to the museum to be exhibited.

   Suddenly the staircase collapsed. Several children were seriously injured. In the resulting confusion several exhibits in the museum were stolen, possibly by other visitors or employees.

   The museum had hired Mendis to repair the staircase a month earlier but it was later found that Mendis had used substandard wood to do the repair, which had caused the staircase to collapse.

Padma, one of the teachers suffered nervous shock on seeing the accident. Due to ongoing depression she was forced to leave her job in the school.

Discuss whether the injured children, Padma, Sarath and the museum management can sue for damages. You must discuss (1) whom each of these plaintiffs should sue and (2) on what basis.

**PART II – Answer THREE questions from this Part (each question carries 20 marks)**

2. "The policy objective underlying vicarious liability is to ensure, insofar as it is fair, just and reasonable, that liability for tortious wrong is borne by a defendant with the means to compensate the victim."

[*The Catholic Child Welfare Society and others (Appellants)* v *Various Claimants (FC) and The Institute of the Brothers of the Christian Schools and others (Respondents)* [2012] UKSC 56]

Discuss this statement indicating whether you think that the current state of the law on vicarious liability is "fair, just and reasonable." You must cite case law in support of your answer.

3. (a) Ramesh and Champika met for the first time at a party. After the party Ramesh offered Champika a lift home. During the party a friend had told Champika that Ramesh had once had his license cancelled for dangerous driving. Champika asked him if he was fit to drive and he replied "Yes I had only one glass of beer the entire night." Champika accepted the lift. Ramesh who was driving at 100 kilometres per hour skidded and hit a lamp post. Champika was seriously injured. The police found that Ramesh was over the legal limit of alcohol for driving.

Champika wishes to sue Ramesh. Advise her.

(b) Rohan and Mohan take part in a young adventurers' contest organised by Adventures Ltd. The contest requires those taking part to form into teams and engage in such activities as climbing mountains, swinging across rocks and crossing rivers using ropes. Adventures Ltd. provides all the equipment and contestants are forbidden to use their own equipment. All contestants must sign a consent form absolving Adventures Ltd. from any injuries that they may suffer in the course of the contest. Each contestant is accompanied by a team leader employed by Adventures Ltd.

Rohan was provided with a rope to use while climbing a steep cliff. It broke and he was injured in the fall.

While hiking through a forest, Mohan's team leader suggested that they take a shorter but more dangerous route that was not included in the instructions. He said that their team had a better chance of winning. All the members of the team including Mohan agreed. Halfway along that route Mohan was injured when he slipped off a narrow path onto rocks below.

Rohan and Mohan have sued Adventures Ltd. for damages. Advise Adventures Ltd. as to any defences it can bring.

4. Kumari, applied for the post of Chief Finance Officer at the ABC Bank. The advertisement for the post stated that the Bank would do an independent assessment of all applicants before short listing them. Mallika, the Human Resources Manager at ABC Bank emailed Sirisena who had been Kumari's Manager about 10 years ago, asking him for an assessment of her. Sirisena replied "I think you should know that when Kumari worked for me we had to hold an inquiry about some missing money. The matter was kept very confidential but I am telling you only." In fact Kumari had been cleared of any wrongdoing but Sirisena did not mention that. Pereira, Mallika's secretary who had access to her official email, accidentally forwarded Sirisena's email to the staff of the Human Resources Department. A staff member who had been a batchmate of Kumari's in university twenty years ago replied to all the staff saying "I am not surprised. In our final year she was caught cheating at an exam."

Kumari did not get the job and found out about the emails that had been circulating about her. However, the reason that she did not get the job was because there was another applicant who was more qualified than she was. She wishes to sue for defamation. Advise her.

5. "There is no substantial difference between private nuisance and the rule in Rylands v. Fletcher. The two actions can be used interchangeably."

Do you agree with this statement? Discuss.

6. The principle of *res ipsa loquitur* does not belong to the law of negligence but to the law of evidence. It refers to situations where an inference of negligence can be drawn so that the burden of proof shifts to the defendant and therefore courts will restrict the application of the principle.

Discuss this statement explaining the situations in which a court may permit the use of the principle.

*****************

COPYRIGHT RESERVED

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 6
இறுதிப்பரீட்சை – 2016/2017
**LLU6814/LWU4326** – தீங்கியல் சட்டம்
காலம் : **03** மணித்தியாலங்கள்

திகதி: 23.07.2018 நேரம் : பி.ப 01.30 – பி.ப 04.30

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்
பரீட்சை மண்டபத்தில் அதிகார பூர்வமற்ற ஆவணங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் அல்லது வேறு பிற இலத்திரனியல் பொருட்களைக் கொண்டிருத்தல் ஒரு பரீட்சைகள் தொடர்பான குற்றமாகும்

முதலாம் பகுதியில் இருந்து ஒரு (01) வினாவிற்கும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

பகுதி I – கட்டாயவினா (40 புள்ளிகள்)

1. பொல்வத்த மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏறத்தாழ 100 மாணவர்கள் பாடசாலை சுற்றுலாவிற்கு அரும்பொருட்காட்சிசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். சிறுவர்கள் அனைவரும் 10-11 வயதிற்குட்பட்டோர். 12 வயதிற்கு கீழ்பட்ட சிறுவர்கள் அரும்பொருட்காட்சி சாலைக்கு இலவசமாக வருகை தர அனுமதிக்கப்பட்டிருந்ததால், அவர்கள் அனுமதிச் சீட்டுக்களை வாங்கவில்லை. எவ்வாறாயினும், பொறுப்பாசிரியர்கள் அனுமதிச் சீட்டுக்களை வாங்கினர். அரும்பொருட்காட்சி சாலையை பார்வையிடும்போது, மேலே உள்ள அறையொன்றுக்கு செல்லத்தக்க பலகையிலான படிக்கட்டில் சில சிறுவர்கள் மேலும் கீழும் ஓடி விளையாட ஆரம்பித்தனர். அப்படிக்கட்டின் கீழ் புறத்தில் “அரும்பொருட்காட்சி சாலை பணியாளர்களுக்கு மட்டும் அனுமதி” என சமிக்ஞை இடப்பட்டிருந்தது. அரும்பொருட்காட்சிசாலையின் பணியாளர்கள் சிறுவர்களை கட்டுப்படுத்துமாறு ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்ட போதும், ஆசிரியர்களால் அவ்வாறு மேற்கொள்ள முடியாமல் இருந்தது. சில சிறுவர்கள் சில கண்காட்சிப் பொருட்கள் சேமிக்கப்பட்டிருந்த அறைக்குள் ஓடிச் சென்று, இரு நூற்றாண்டு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த விலை மதிப்பற்ற நகைப்பெட்டி ஒன்றை கீழ் விழுத்தி சீர்செய்ய இயலாத வண்ணம் சேதப்படுத்தினர். இந்நகைப் பெட்டி அதனை காட்சிப்படுத்த அரும்பொருட்காட்சிசாலைக்கு அனுமதித்த சாரத் என்பவனுக்கு சொந்தமானது ஆகும்.

திடீரென படிக்கட்டு இடிந்து வீழ்ந்தது. பல சிறுவர்கள் காயமடைந்தனர். இதனால் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவால், அரும்பொருட்காட்சி சாலையின் பல கண்காட்சிப் பொருட்கள், பிற வருகையாளர்களால் அல்லது வேலையாட்களால் திருடப்பட்டன.

அரும்பொருட்காட்சி சாலையானது ஒரு மாதத்திற்கு முன்னர் படிக்கட்டை திருத்தம் செய்ய மென்டிஸ் என்பவரை பணிக்கமர்த்தி இருந்தபோதும், அப்படிக்கட்டை திருத்த மென்டிஸ் தரக்குறைவான பலகையை உபயோகித்திருந்தமை கண்டறியப்பட்டது. இதுவே இடிந்து விழக் காரணமானது.

பத்மா எனப்படும் ஒரு ஆசிரியர் இவ்விபத்தை கண்ணுற்றதால் நரம்பியல் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் தொடரும் மன அழுத்தம் காரணமாக பாடசாலை பணியில் இருந்து நீங்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்.

பாதிப்புற்றுள்ள சிறுவர்கள், பத்மா, சாரத் மற்றும் அரும்பொருட்காட்சி சாலையின் முகாமைத்துவம் என்பன நிவாரணம் கோரி வழக்கிட முடியுமா என ஆராய்க. நீர் (1) இவ் ஒவ்வொரு வாதியும் யார் மீது வழக்கிட வேண்டும் என்றும் (2) எதன் அடிப்படையில் என்பதன் மீதும் ஆராய வேண்டும்.

**பகுதி II - இப்பகுதியில் இருந்து மூன்று (03) வினாக்களுக்கு விடையளிக்க (ஒவ்வொரு வினாவிற்கும் 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்)**

2. "பகரப் பொறுப்புடைமையில் கோடிட்டு காட்டப்படும் கொள்கை இலக்கானது, பிரதிவாதியால் இழைக்கப்பட்ட தீங்கியற்தவறிக்கான, பாதிக்கப்பட்டவருக்கு நட்டயீடு வழங்குவதுடனான பொறுப்புடைமையானது, நியாயமும் நீதியும் சாதாரணமும் ஆனது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆகும்"

*(The catholic Child Welfare Society and others (Appellants)* v *Various Claimants (FC) and The Institute of the Brothers of the Christian Schools and others (Respondents) [2012] UKSC 56)*

பகரப்பொறுப்பு மீதான சமகால சட்டநிலை "நியாயம், நீதி மற்றும் சாதாரணமானது" என நீர் கருதுகிறீரா என்பதைக் குறிப்பிட்டு இக்கூற்றை ஆராய்க. உமது விடையை ஆதாரப்படுத்த தீர்ப்புச் சட்டத்தைக் குறிப்பிடவும்.

3. (அ) ரமேஸ் என்பவன் சம்பிக்கா என்பவளை முதல் முறையாக ஒரு கொண்டாட்ட நிகழ்வில் சந்தித்தான். நிகழ்வின் பின்னர் ரமேஸ், சம்பிக்காவை தன் வாகனத்தில் கொண்டு சென்று அவளது வீட்டில் விட வினவினான். கொண்டாட்ட நிகழ்வின் போது சம்பிக்காவின் நண்பன் ஒருவன் ரமேஷின் உரிமம் அபாயமான வாகன ஓட்டுதலிற்காக ஒருமுறை இரத்து செய்யப்பட்டதாகக் கூறி இருந்தான். சம்பிக்கா, ரமேஷிடம் அவன் வாகனம் ஓட்டக்கூடிய நிலையில் உள்ளானா என வினவியதற்கு "ஆம், முழு இரவும் ஒரு குவளை பியர் மட்டுமே பருகினேன்" என பதிலளித்தான். மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வாகனம் ஓட்டிய ரமேஷ், தடம்மாறி ஒரு மின் கம்பத்தில் மோதினான். சம்பிக்கா கடும் காயமடைந்தாள். வாகனம் ஓட்டுவதற்கான மதுபான நுகர்வின் உள்ளெடுப்பின் எல்லையை அவன் மீறியதாக பொலிஸ் கண்டறிந்தது.

சம்பிக்கா, ரமேஷின் மீது வழக்குத்தொடர விரும்புகிறாள். அவளிற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) ரோகன் மற்றும் மோகன் ஆகியோர் அட்வென்சர்ஸ் லிமிட்டட் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட இளம் சாகசக்காரர்களான போட்டியில் கலந்து கொண்டனர். போட்டியானது, பங்கெடுப்பவர்களை குழுக்களாகப் பிரிந்து, கயிறுகளைப் பயன்படுத்தி ஆறுகளைக் கடத்தல் மற்றும் மலைகளிற்கிடையே ஊஞ்சலாடல், மலைகளில் ஏறுதல் முதலான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தேவைப்படுத்தியது. அட்வென்சர்ஸ் லிமிட்டட் சகல கருவிகளையும் வழங்குவதுடன், போட்டியாளர்கள் தமது சுய கருவிகளை பாவனை செய்ய தடைசெய்யப்பட்டு இருந்தனர். சகல போட்டியாளர்களும் இப்போட்டிக் காலத்தில் அவர்கள் பாதிப்புறக் கூடிய ஏதேனும் காயங்களில் இருந்து அட்வென்சர்ஸ் லிமிட்டட்டை பொறுப்புக் கூறலில் விடுவிப்பதற்கான இணக்கப் பத்திரிகையில் கையொப்பமிட

வேண்டும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் அட்வென்சர்ஸ் லிமிட்டட் இனால் பணிக்கமர்த்தப்பட்டுள்ள குழுத் தலைவர் ஒருவரின் துணையளிக்கப்ட்டுள்ளது.

செங்குத்தான குன்றொன்றை ஏறும்போதும் உபயோகிக்க கயிறு ஒன்று ரோகனுக்கு வழங்கப்பட்டது. அது உடைந்ததால் அவன் விழுந்து காயமுற்றான்.

காடு ஒன்றினூடான நடைப் பயணத்தின்போது, மோகனின் குழுத்தலைவர் அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்டிராத குறுகிய ஆனால் பயங்கரமான பாதையில் பயணிக்குமாறு பரிந்துரைத்தான். அவன் தமது குழு வெற்றி பெறுவதற்கான அதிக வாய்ப்பு உள்ளது என்று உரைத்தான். மோகன் உள்ளிட்ட குழுவில் உள்ள சகல உறுப்பினர்களும் இணங்கிய போதும், கீழுள்ள கற்பாறைகளினூடு ஓர் குறுகிய வழியில் நழுவியதால் காயமுற்றான்.

ரோகன் மற்றும் மோகன் ஆகியோர் அட்வென்சர்ஸ் லிமிட்டட் மீது நிவாரணங்களுக்காக வழக்கிட்டுள்ளனர். அட்வென்சர்ஸ் லிமிட்டட் ஏதேனும் எதிர்வாதத்தை கொண்டு வர இயலுமா என அறிவுறுத்துக.

4. குமாரி என்பவள் ABC எனும் வங்கியின் தலைமை நிதி அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்தாள். இப்பதவிக்கான விளம்பரத்தில், சகல விண்ணப்பத்தாரிகளையும் தெரிவு செய்ய முன்னர் வங்கி ஓர் சுதந்திரமான மதிப்பீட்டை மேற்கொள்ளும் எனக் குறிப்பிட்டிருந்தது. ABC வங்கியின் மனிதவள முகாமையாளரான மல்லிகா என்பவள் குமாரியின் முகாமையாளராக 10 வருட காலத்திற்கு முன் இருந்த சிறிசேன என்பவரிடம் மல்லிகா தொடர்பான ஓர் மதிப்பீட்டை மின்னஞ்சல் மூலமாக கோரினாள். சிறிசேன, “குமாரி எனக்காக பணியாற்றிய போது சில காணாமற்போன பணம் தொடர்பில் ஓர் விசாரணையை நாம் மேற்கொள்ள வேண்டிருந்தது, இது இரகசியமாக பேணுப்பட்டது. இருப்பினும் உங்களிற்கு மட்டும் தெரிவிக்கின்றேன்” என பதிலளித்தான். உண்மையில், எத்தகு தவறும் புரியவில்லை என குமாரி தெளிவுபடுத்தியிருந்த போதும் சிறிசேன அதனைக் குறிப்பிடவில்லை. மல்லிகாவின் அலுவலக மின்னஞ்சல்களை அணுகக்கூடிய மல்லிகாவின் செயலாளரான பெரேரா என்பவன் தற்செயலாக அம்மின்னஞ்சலை மனித வள திணைககளத்தில் இருந்த சகல பணியாளர்களிற்கும் அனுப்பியிருந்தான். ஊழியர்களுள் இருபது வருட காலத்திற்கு முன் குமாரியுடன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றிருந்த உறுப்பினர் ஒருவர் சகல பிற ஊழியர்கட்கும் “நான் இது குறித்து ஆச்சரியப்பட மாட்டேன். எங்களது இறுதிவருட கற்கையின் போது அவள் பரீட்சைக் குற்றம் புரிந்து அகப்பட்டுள்ளாள்” என பதிலளித்தாள்.

குமாரி அத்தொழிலை பெறாததுடன், அவள் குறித்து அனுப்பபட்டிருந்த மின்னஞ்சல்கள் குறித்து கண்டறிந்தாள். எவ்வாறாயினும், அவள் அத்தொழிலை பெறாததற்கான காரணம் மற்றுமொரு விண்ணப்பத்தாரி அவளிலும் தகைமை வாய்ந்தவராக இருந்தமையால் ஆகும். குமாரி அவதூறிற்காக வழக்கிட விரும்புகிறாள். அவளிற்கு ஆலோசனை வழங்குக.

5. “ரைலண்ட் எதிர் பிளெட்சர் (Rylands v. Fletcher) மற்றும் தனித்தொல்லை என்பனவற்றுக்கு இடையே பெரிய வேறுபாடு இல்லை. இரு வழக்குகளும் ஒன்றின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்படாதவாறு ஒன்றுக்கு பதிலாக மற்றொன்றைப் பயன்படுத்த முடியும்”

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? ஆராய்க.

6. “செயலே செப்பும்” *(res ipsa loquitur)* விதியானது கவனயீன சட்டத்திற்கு உரித்தில்லாததும் சான்றுச் சட்டத்திற்கு உரியதும் ஆகும். இது கவனயீன இடையீடு உள்ள சந்தர்பபங்களில் எண்பிக்கும் பொறுப்பு பிரதிவாதிக்கு சாட்டப்படுவதை எடுத்துக் காட்டுவதுடன், எனவே, நீதிமன்றுகள் இவ்விதியின் பிரயோகத்தை மட்டுப்படுத்துகின்றன.

இவ்விதியை பயன்படுத்த நீதிமன்ற அனுமதிக்கும் சந்தர்ப்பத்தை விளக்கி இக்கூற்றை ஆராய்க.

*பதிப்புரிமை பெற்றது*